# மனிதர்

**அ**ழகு, உதுமான் (ரலி) அவர்களின் உள்ளத்தில் மட்டும் இருக்கவில்லை, உடலிலும் இருந்தது. 'உலகின் அழகு' என்று சொல்லப்படும் செல்வத்தை அவர்களுக்கு அள்ளிக்கொடுத்த அல்லாஹ், உடலின் அழகையும் அவர்களுக்கு அதிகமாய் வழங்கி இருந்தான். உடலின் அழகு, உண்மையில் அல்லாஹ்வின் அருட் கொடைகளில் ஒன்றல்லவா? அல்லாஹ்வின் தூதர்களில் இந்த அருட்கொடையை அதிகம் பெற்றவர்களாய் நபி யூஸுஃப் (அலை) அவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். அல்லாஹ்வாலேயே புகழப்படும் அளவு, அழகு பெற்றிருந்த நபி யூஸுஃப் (அலை) அவர்கள் எப்படித்தான் இருந்தார்களோ என எண்ணி ஏங்குபவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறும் ஆறுதல் இது :''நபி யூஸுஃப் (அலை) அவர்களைப் பார்க்க விரும்புபவர்கள் உது மானைப் பார்த்துக் கொள்ளலாம்.''

உடல் அழகில் பிரதானமானது முக அழகு. அகத்தில் அழுகை இருந்தாலும், உதுமான் (ரலி) அவர்களின் முகத்தில் அகலாதிருந்தது மகிழ்ச்சி. அகத்தில் வழுக்கல் இல்லாதிருந்தாலும் அவர்களின் முகத்தில் அம்மை வடுக்கள் சில அமைந்திருந்தன. அந்த வடுக்கள் அவர்களின் முக அழகை வடிப்பதற்குப் பதிலாகப் பெருக்கவே செய்தன. அவர்களின் கன்னங்கள் வற்றி இராமல் சதைப்பற்று உள்ளனவாய் இருந்தன. உண்மையில் அவர்களின் கன்ன வண்ணம், வெண்ணெய்யில் இளஞ்சிவப்பு ஏற்பட்டதுபோல் இருந்தது. அவர்களின் மூக்கு சிறிது உயர்ந்தும், சற்று வளைந்தும் இருந்தது. நெற்றி சற்று ஏறியிருந்தது. அவர்களின் கண்கள் ஒளி பொருந்தியன வாய் இலங்கின. அவர்களின் தாடி அடர்த்தியானதாயும், நீளமான

தாயும் இருந்தது. தலைமயிரும் காது வரை நீண்டிருந்தது. பற்கள் வரிசையானவையாயும், பிரகாசமானவையாயும் இருந்தன. அவர் களின் உடல் நிறம் வெண் கோதுமையை வென்று நின்றது. அடக்கம் அதிகமுள்ளவர்களாய் இருந்த அவர்களின் உடல் அமைப்பும், அடக்க முள்ளதாகவே இருந்தது. அவர்கள் உயரமானவர்களும் அல்லர், குள்ளமானவர்களும் அல்லர். நடுத்தர உயரமுள்ளவர்கள் என்று அவர்களை நவிலலாம். இனிய இயல்புகளின் இல்லமாய் இருந்த அவர்கள் இனிய குரலும் உள்ளவர்களாய் இருந்தனர். அல்லாஹ்வின் திருமறையை அவர்கள் வாயினால் ஓதினால், அவர்கள் தொண்டை யிலிருந்து தேன் ஒழுகும். அது செவி வழியே நுழைந்து, கேட்பவர் உள்ளத்தைப் பிணைக்காது இராது. அவர்களின் கண்டம் விட்டுக் கடின சொற்கள் ஒரு போதும் வெளி வந்ததில்லை. தம்மிடம் கடுமையாகப் பேசுபவர்களிடமும் அவர்கள் மிருதுவாகவே பேசுவார்கள்.

உதுமான் (ரலி) அவர்கள், நபி யூஸுஃப் (அலை) அவர்களின் அழகை உடலில் கொண்டிருந்தாலும், உருவத்தில் நபி இப்ராஹீம் அவர்களையும், நபி முஹம்மத் (ஸல்) அவர்களையும்தான் அதிகம் ஒத்திருந்தனர். அதற்கு ஆதாரம், அண்ணல் நபி (ஸல்) அவர்கள், தம் அன்பு மகளும், உதுமான் (ரலி) அவர்களின் அருமை மனைவியுமான ருகையா அவர்களிடம் கூறிய இந்தச் சொற்கள் : ''அவர் (உதுமான்) உம் பாட்டனார் இப்ராஹீமுக்கும், உம் தந்தை முஹம்மதுக்கும் மிகவும் ஒத்தவர்.'' உதுமான் (ரலி) அவர்களுக்கு ஏற்ற அழகிய மனைவியாகவே ருகையா அவர்களும் இருந்தனர். அதனால் பெண்கள் மத்தியில் இந்தப் பேச்சு வழக்காகியது.: ''மனிதர் பார்ப் பதற்கு மிகவும் அழகானவர்கள் ருகையாவும், அவர் கணவரும்.''

இதை உறுதிப்படுத்துகிறது இந்த நிகழ்ச்சி. அதை உஸாமா (ரலி) அவர்களே அறிவிக்கிறார்கள். அப்பொழுது உஸாமா (ரலி) அவர்கள் ஒரு சிறுவர். '' ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் அவர்கள், தம் இல்லத் தில் கறி சமைத்து, அதை ஒரு பாத்திரத்தில் வைத்து என்னிடம் தந்து உதுமான் (ரலி) அவர்களின் வீட்டிற்குக் கொடுத்துவர என்னை அனுப்பினார்கள். நான் சென்றபோது, உதுமான் (ரலி) அவர்களும் , ருகையா (ரலி) அவர்களும் அங்கு இருந்தனர். அவர்கள் இருவரையும் நான் மாறி, மாறிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்து நான் திரும்பச் சற்றுத் தாமதமாகிவிட்டது. அதற்கான காரணத்தை அல்லாஹ்வின் தூதர் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். நான் பதில் எதுவும் பகரவில்லை. அதன்பின் அல்லாஹ்வின் தூதர் அவர்கள் '' நீ



வீட்டின் உள்ளே சென்றாயா?'' என்று கேட்டார்கள். ''ஆம்! அல்லாஹ்வின் தூதர் அவர்களே!'' என்றேன். அதைக் கேட்டு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ''அவர்களை விடப் பேரழகு வாய்ந்த தம்பதிகளை நீ இதற்கு முன் பார்த்துள்ளாயா?'' என்று கேட்டார்கள். ''ஒருபோதும் நான் கண்டதில்லை'' என்றேன் நான்.

உதுமான் (ரலி) அவர்களுக்கு வெள்ளை மனம் இருந்தது. ஆனால், உடல் நிறம் சற்றுக் கறுத்து இருந்தது. இயற்கையிலேயே அழகிய தோற்றம் அமைந்தவர்களாய் இருந்ததால், அவர்களுக்கு அழகிய ஆடை அவசியமில்லாதிருந்தது. அவர்கள் நல்ல ஆடைகளை அணிந்தார்களாயினும் ஆடம்பர ஆடைகளை அணிந்ததில்லை. ஆடம்பர ஆடைகளை அணியும்போது, அது உடலை அழகுபடுத்துவ துடன், உள்ளத்தை அழுக்காக்கி விடுகிறது. ஆடம்பர ஆடை அணிந்திருப்பவர், அவ்வித ஆடை அணிந்திராதவர்களைச் சற்று அலட்சியத்துடன் பார்க்கவும் அது செய்துவிடுகிறது. அதனால் உதுமான் (ரலி) அவர்கள் எளிய உடையையே அதிகம் விரும்பி னார்கள்.அவர்கள் அரபு நாட்டுச் செல்வர்கள் அணியும் உரோம நாட்டு நப்த் என்னும் ஆடையை அணிந்ததே கிடையாது. மெல்லிய துணி யால் ஆன ஆடையை வெறுத்து, கடினத் துணியால் ஆன ஆடை களையே அதிக உவப்புடன் அணிந்து கொண்டார்கள். அவர்கள் தம் உடலில் போர்வை போர்த்திக் கொண்டார்கள், முரட்டுச் சட்டை போட்டுக் கொண்டார்கள். அவை ஒவ்வொன்றின் விலையும் எட்டு திர்ஹங்களை எட்டியதில்லை. ''கலீபாவாக இருந்தபோது அவர்கள் ஒரு நாள் ஜுஉம்ஆப் பேருரை நிகழ்த்தினர். அப்பொழுது அவர்கள், அணிந்திருந்த ஆடையின் விலை நான்கு அல்லது ஐந்து திர்ஹங் களுக்கு அதிகம் இராது'' என்று ஒருவர் அறிவிக்கிறார்.

அவர்கள் பெரும்பாலும் கைலிதான் அணிவார்கள். இறக்கப் போகும் அன்று மட்டும், பைஜாமா அணிந்திருந்தார்கள். அவர்கள் அணிந்த கைலியின் விலையும் நான்கு அல்லது ஐந்து திர்ஹங்களுக்கு அதிகம் போகாது. அவர்கள் தம் மனைவியருக்கும் சாதாரண ஆடை யையே வழங்குவார்கள். அவர்கள் தம் ஆடைகளையும், உடலையும் சுத்தமாக வைத்துக் கொள்வார்கள். ஆடைகளை நன்கு துவைத்துக் கொள்வார்கள்; தினமும் குளித்துக் கொள்வார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களைப் போல் அர்த்தர் பூசிக் கொள்வது அவர்களின் வழக்கம்.

உடையில் காட்டிய அதே எளிமையை அவர்கள் உணவிலும் காட்டினார்கள். விருந்தினருக்கு நல்ல உணவு அளிப்பது கடப்பான காரியம் அல்ல என்பது அவர்களின் கருத்து. எனவே தம் விருந்தாளி களுக்கு உயர்ந்த உணவு பரிமாறி விட்டுத் தாம் மட்டும் சாதாரண உணவையே சாப்பிடுவார்கள். சிறந்த உணவு என்பது, பிறருக்குப் பகிர்ந்தளித்து உண்ணப்படும் உணவே அல்லவா? எனவே அவர்கள் பெரும்பாலும் தனித்து உண்ண மாட்டார்கள். சுற்றத்தாருடனும், நண்பர்களுடனும் சேர்ந்து உண்பதே அவர்களின் வழக்கமாகும். அவர்கள் ரொட்டியை காடியுடனோ, ஜைத்தூன் எண்ணெய்யுடனோ சேர்த்துத்தான் சாப்பிடுவார்கள்.உடை, உறையுள், உணவு ஆகியன பற்றி அவர்கள் புகன்ற பொன்மொழி ஒன்று இறப்பை வென்று, இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. அது இதுதான் : ''நல்ல துணி அணிய வேண்டும் என்று ஆசை கொண்டவனே! நீ கஃபனை எண்ணிப்பார்! நல்ல வீட்டில் வாழ வேண்டும் என்று ஆசை கொண்டவனே! நீ கப்ரை நினைவு கூர்! நல்ல உணவு உண்ண வேண்டும் என ஆசை கொண்டவனே! நீ எறும்பு, பூச்சி ஆகியவற்றின் ஆகாரம் ஆவாயே, அதை நினைவு கொள்!''

இப்படி உதுமான் (ரலி) அவர்கள் உயர்ந்த உடை, உறையுள், உணவு ஆகியன பற்றி அவ்வளவு அக்கறை கொள்ளாதிருந்ததற்குக் காரணம், அவர்களின் நெஞ்சில் எப்பொழுதும் இருந்து கொண்டிருந்த இறையச்சமும், இறப்பச்சமும் ஆகும். இறையச்சம் அவர்களிடம் அதிகம் இருந்ததால், அவர்கள் இறைவனை அதிகம் வணங்குபவர் களாய் இருந்தார்கள். ''இறைவனுக்கு அஞ்சுங்கள்! அவன் முன் நீங்கள் ஒன்று திரட்டப்படுவீர்கள்'' என்று அவர்கள் கூறுவது வழக்கம். அவர்கள் இரவின் முன் பகுதியில் சிறிது உறங்குவார்கள். பிற்பகுதியை வணக்கத்தில் கழிப்பார்கள். சில சமயங்களில் இரவின் முழுப் பகுதியையும் வணக்கத்தில் செலவிட்டு விடுவார்கள். அவர்களுக்கு திருக்குர்ஆன் முழுவதும் மனனமாக இருந்தது. அதனால் அவர்கள் ஒரே ரக்அத்தில் திருக்குர்ஆன் முழுவதையும் ஓதித் தொழுவார்கள். திருக்குர்ஆன் ஓதுவது, ஓதுவதைக் கேட்பது, அதனைக் கற்பிப்பது, இவையெல்லாம் வணக்கத்தை சேர்ந்தவைதாம். அவர்கள் அதிகமாய் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் குத்திக் கொல் லப்படும்போதுகூட திருக்குர்ஆனைத்தான் ஓதிக் கொண்டிருந்தார்கள்.

திருக்குர்ஆனை ஓதுவது, ஓதுவதைக் கேட்பது ஆகியவற்றுடன், அதனைப் பிறருக்குக் கற்பிப்பதிலும் ஆவலுள்ளவர்களாய் அவர்கள் இருந்தார்கள். அதற்கு ஆதாரம் அவர்களின் இந்தச் சொற்கள் : ''இந்த உலகத்தில் நான் மூன்று பொருள்களை நேசிக்கிறேன். அவையாவன: ''(1) பசித்தோருக்கு உணவிடல் (2) ஆடையற்றோருக்கு ஆடை அளித்தல், (3) திருக்குர்ஆனை ஓதுதல், அதைப் பயிற்றுதல்.'' அவர்கள் திருக்குர்ஆனை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஓதியது போலவே ஓதுவார்கள். இந்த முறையை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் தொழுகையில் நீளமான அத்தியா யங்களை ஓதுவார்கள். ''கலீபா அவர்கள் இளங்காலைத் தொழு கையில் பெரும்பாலும் யூஸுஃப் அத்தியாயத்தை ஓதக் கேட்டு, நானும் அவர்களைப் போலவே ஓதக் கற்றுக்கொண்டேன்'' என்று ஒருவர் கூறினார். அல்லாஹ்வின் திருமறையுடன், அல்லாஹ்வின் தூதர் உரையையும் மக்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.



அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருகில் அதிக காலம் இருக்கும் பாக்கியம் பெற்ற ஒரு சிலரில் அவர்களும் ஒருவர். ஆயினும் அவர்கள் அதிக ஹதீஸ்களை அறிவிக்கவில்லை. அதற்குக் காரணம், ''நான் சொல்லாததை, நான் சொன்னதாகக் கூறுவோன் நரகத்தைத் தன் இருப்பிடமாகக் கொள்வான்'' என்னும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சொல்லை அவர்கள் அறிந்திருந்ததாகும். அதனால் ஒரு நூற்று எழுபத்திரண்டு ஹதீஸ்களே, அவர்களை ஆதாரமாகக் கொண்டு இருந்து கொண்டிருக்கின்றன.

அவர்கள் அரசின் பல பாகங்களுக்கும் ஆசிரியர்களை அனுப்பி, மக்களுக்கு குர்ஆனையும் ஹதீஸையும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். சிறைக் கைதிகளுக்கு இவற்றைக் கற்பிப்பதிலும், அவர்கள் கவனம் செலுத்தினார்கள். தாமே முஸ்லிம்களுக்கு இஸ்லாமியச் சட்டங்களைக் கற்றுக் கொடுத்தார்கள். தம் வீட்டின் பின் பக்கத்தில் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு அவசியம் எனக் கருதி ஒரு நூலகத்தையும் ஏற்படுத்தினார்கள்.

இஸ்லாத்திற்கு முந்திய காலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்த ஒரு சிலரில் அவர்களும் ஒருவராக இருந்தனர். அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு வஹீ வரும்போது, அதை அப்போதைக்கப்போது எழுதுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தவர்களில் அவர்களும் ஒருவர். அதற்குக் காரணம் அவர்களின் கையெழுத்து மிகவும் அழகாக இருந்த தாகும். அவர்கள் வஹீயை எழுதுபவர்களாய் இருந்ததால், திருக்குர் 'ஆன் வசனங்கள் வந்த வரிசை விவரம் அவர்களுக்கு நன்கு தெரிந்

திருந்தது. திருக்குர்ஆன் வசனங்களில் இருந்த சட்டங்களை நன்கு அறிந்தவர்களாகவும், இருந்தார்கள். ஹஜ் சம்பந்தமான சட்டங்களை அவர்கள் நன்கு அறிந்திருந்ததால், உமர் (ரலி) அவர்கள் கூட அவை பற்றி அவர்களிடம் கேட்பது வழக்கம். திருக்குர்ஆன் ஓதப்படுவதைக் கேட்பதிலும், அவர்களுக்கு ஆவல் இருந்தது. அதற்கு ஆதாரம் அவர்களின் இந்தச் சொற்கள். ''உங்களுடைய மனம் சுத்தம் அடைந்திருந்தால் குர்ஆனை ஓதுவதிலும் (அதனைக்) கேட்பதிலும், ஆவல் தீர்ந்தவர்களாய் இருக்க மாட்டீர்கள்.''

அவர்கள் இரண்டு, மூன்று நட்களுக்கு ஒரு முறை நோன்பு வைப்பார்கள். சில சமயங்களில் தொடர்ந்து மாதக் கணக்கில் நோன்பு வைப்பார்கள். அவர்கள் கொல்லப்பட்ட அன்று கூட நோன்பு வைத்துத்தான் இருந்தார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் தவறாமல் ஹஜ்ஜுச் செய்வார்கள். கலீபாப் பதவி ஏற்ற ஆண்டும், அவர்கள் கொல்லப்பட்ட ஆண்டும் தாம் ஹஜ்ஜுச் செய்யவில்லை. கலீபா பதவி ஏற்றதும், ஹஜ்ஜுச் செய்யச் செல்லாததற்குக் காரணம், கடமைகள். கடைசி ஆண்டில் ஹஜ்ஜு செய்யச் செல்லாததற்குக் காரணம், கலகக்காரர்கள். இறப்புப் பற்றி அச்சம் அவர்களுக்கு அதிகம் இருந்தது. இறப்புப் பற்றி நினைந்து நினைந்து அழுவது அவர்களின் வழக்கமாகும். அவர்கள் தாம் பிறந் திருக்கவே கூடாது என்று எண்ணினார்கள். ''இறந்த பிறகு என்னை இறைவன் மீண்டும் எழச் செய்யாமல் இருந்துவிட மாட்டானா?' என்று அவர்கள் அடிக்கடி கூறுவது வழக்கம். அடக்கத் தலங்களுக்கு அருகில் தங்க நேரும்போதெல்லாம், அவர்கள் தம் தாடி நனையும் அளவு அழுவார்கள். கலீபாவாகிக் கடமைகள் நிறைந்திருந்த சமயங்களில் கூட, அவர்கள் தம் அடிமையை வாகனத்தில் ஏற்றிக் கொண்டு அடக்கத் தலங்களுக்குச் சென்று உள்ளம் உருகிட அழுவார்கள். ஒருவர் அவர்களிடம், ''நீங்கள் சுவர்க்கத்தையும், நரகத்தையும் நினைக்கும் போது அழுவதில்லை. அடக்கத்தலங்களைக் கண்டால் அழுது விடுகிறீர்களே? அதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டபோது, அவர்கள் கூறினார்கள், ''மறுமையின் தங்குமிடங்களில் கப்ருதான் (முதல்) தங்குமிடம். எனவே, ஒருவர் அதில் (வேதனையை விட்டும்) தப்பிவிட்டால், அதன்பின் இருப்பது அதைவிட எளிதாகிவிடும். அதில் ஒருவர் தப்பவில்லையாயின், அதன்பின் இருப்பது அதைவிட மிகவும் கடுமையாகிவிடும். ''கப்ரைவிட மிகக் கடுமையான கெட்ட இடத்தை நான் ஒருபோதும் கண்டதில்லை'' என அல்லாஹ்வின் தூதர் கூற நான் கேட்டிருக்கிறேன்.



இவ்விதம் அவருக்குப் பதில் கூறிய அவர்கள், தமக்கு அறிவுரையாக இப்படிப் பாடிக் கொண்டிருப்பார்கள், '' நீர் கப்ருவின் வேதனையை விட்டும் தப்பிவிடின், பெரும்பாலான வேதனைகளை விட்டும் தப்பி விடுவீர். இல்லையெனில், நிச்சயமாக நீர் தப்பிவிடுவீர் என நான் எண்ணுவதற்கில்லை.''

இறப்பு நிச்சயம் என்று அறிந்திருந்தும், மனிதன் நடந்து கொள்ளும் முறையைப் பற்றித் தாம் அடைந்த ஆச்சரியத்தை அவர்கள் இப்படி அறிவிக்கிறார்கள் : ''ஆச்சரியமாயிருக்கிறது அந்த மனிதனைப் பற்றி. அவன் இறப்பு உண்டு என்று நம்புகிறான். ஆயினும் சிரிக்கிறான். ஆச்சரியமாயிருக்கிறது அந்த மனிதனைப் பற்றி. அகிலம் அழிந்து போகக் கூடியது என்று அறிந்திருக்கிறான். ஆயினும் அதை விரும்புகிறான். ஆச்சரியமாயிருக்கிறது அந்த மனிதனைப் பற்றி. தக்தீரைப் பற்றி அறிந்திருக்கிறான். ஆயினும் தன்னை விட்டுப் போன பொருளைப் பற்றி வருத்தப்படுகிறான். ஆச்சரியமாயிருக்கிறது அந்த மனிதனைப் பற்றி. கணக்குக் கொடுக்க வேண்டும் என அறிந் திருக்கிறான். ஆயினும் பணம் சேர்க்கிறான். ஆச்சரியமாயிருக்கிறது அந்த மனிதனைப் பற்றி. நரகம் உண்மை என நம்புகிறான். ஆயினும் பாவம் செய்கிறான். ஆச்சரியமாயிருக்கிறது அந்த மனிதனைப் பற்றி. ஆண்டவன் உண்டு என்று நம்புகிறான். ஆயினும் மற்றவர்கள் மீது நம்பிக்கை வைக்கிறான். ஆச்சரியமாயிருக்கிறது அந்த மனிதனைப் பற்றி. சுவர்க்கம் உண்டு என்று நம்புகிறான். ஆயினும் உலகின் ஆசையில் ஈடுபடுகிறான். ஆச்சரியமாயிருக்கிறது அந்த மனிதனைப் பற்றி. ஷைத்தான் விரோதி என்று அறிந்திருக்கிறான். ஆயினும் அவனுக்கு வழிபடுகிறான்.''

இறப்பச்சம் இருந்ததால் அவர்கள் பாவம் செய்யப் பயப்பட் டார்கள். இறப்பைக் கடுமையாக்குவதும், இறப்பிற்குப் பிறகு வரும் வாழ்க்கையை நரகமாக்குவதும் பாவமாக இருந்ததால் தான், அதற்கு அவர்கள் அவ்வளவு அஞ்சினார்கள். அதனால்தான் அவர்கள் கூறினார்கள், ''நம்பிக்கை வைக்காதே ஆண்டவன் மீது தவிர்த்து! பயப் படாதே பாவத்தைத் தவிர்த்து!'' என்று. எந்தப் பாவமும் ஆண்ட வனின் பார்வையிலிருந்து தப்ப முடியாது என்பது அவர்களின் கருத்து. அதனால்தான் அவர்கள் கூறினார்கள், ''நீ பாவம் செய்ய நாடினால்

எந்த இடத்தில் ஆண்டவன் இல்லையோ, அந்த இடத்தைத் தேடு!'' என்று.

இறையச்சம், இறப்பச்சம் இரண்டும் இணைந்து ஒச்சமற்ற ஒரு வாழ்வாய் அவர்களின் வாழ்வு அமைந்ததற்குக் காரணம், அல்லாஹ்வின் தூதர் அல்லவா? எனவே அவர்கள் மீது அவர்களுக்கு அளவற்ற அன்பிருந்தது. அதற்கு ஆதாரமாக எத்தனையோ சம்பவங்கள் இருக்கின்றன. ஒரு நாள் அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தம் வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தார்கள். அதனை ஏற்றுக் கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தோழர்கள் சிலருடன் புறப்பட்டனர். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பின்னே நடந்து வந்த உதுமான் (ரலி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் வீடு நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியையும் எண்ணிக்கொண்டே வந்தார்கள். ''அது எதற்கு?'' என்று அண்ணல் நபி(ஸல்) அவர்கள் வினவிய போது, உதுமான் (ரலி) அவர்கள் உரைத்த பதில் இது : ''தங்களுக்கு சங்கை செய்வதற்காகத் தாங்கள் என் வீடு நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் ஓர் அடிமையை விடுதலை செய்ய விரும்புகிறேன்.''

இன்னொரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஏழை ஒருவர் வந்தார். '' அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு வயதுக்கு வந்த மூன்று பெண் மக்கள் இருக்கின்றனர். அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்க என்னிடம் எவ்விதப் பொருள் வசதியும் இல்லை. தாங்கள் தாம் அதற்கு வழி செய்ய வேண்டும்'' என வேண்டி நின்றார். அவர்களிடம் அன்று அவருக்குக் கொடுக்க எந்தப் பொருளும் எஞ்சியிருக்கவில்லை. அதனால் அவர்கள் அவரை உதுமான் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அவர் உதுமான் (ரலி) அவர்களிடம் வந்தார். அல்லாஹ்வின் பேரால் தமக்கு உதவும்படி வேண்டிக் கொண்டார். உதுமான் (ரலி) அவர்கள் அவருக்குப் பத்து திர்ஹம்கள் கொடுத்தார்கள். அந்த மனிதர் திகைத்துப் போனார், உதுமான் (ரலி) அவர்கள் தந்த தொகை கண்டு. உடனே அவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார், உதுமான் (ரலி) அவர்கள் தந்த தொகையைக் கூறினார். அவரை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீண்டும் உதுமான்(ரலி) அவர்களிடம், '' அல்லாஹ்வுடைய தூதர் பேரால் உதவி செய்யுங்கள் என்று கோரும்!'' என்று கூறி அனுப்பி வைத்தார்கள்.



அவர் உதுமான் (ரலி) அவர்களிடம் வந்தார். ''அல்லாஹ்வுடைய தூதர் பேரால் எனக்கு உதவி செய்யுங்கள்! '' என்று கேட்டார். அதைக் கேட்டதுதான் தாமதம், உதுமான் (ரலி) அவர்கள் உள்ளே சென்று ஏராளமான பொருள்களைக் கொண்டு வந்து குவித்து, ''எடுத்துக் கொள்ளும்! எங்களின் அருமைத் தலைவர் பெயரைச் சொல்லி கேட்ட நீர் குறையோடு போகக்கூடாது'' என்று கூறினார்கள். அந்த மனிதர் இது கண்டு குழம்பினார். அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார், '' அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ் பேரில் கேட்டபோது பத்து திர்ஹம் தந்தவர் தங்கள் பெயரைக் கேட்டதும் தம் பொருள் அனைத்தையும் தந்துவிட்டாரே?'' என வினவினார்.

'இதன் பொருளை உதுமானிடமே கேட்டு விடுவோம்' என எண்ணி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அந்த மனிதரையும் அழைத்துக் கொண்டு உதுமான் (ரலி) அவர்களின் வீட்டிற்கு வந்தார்கள். விவரம் கேட்டார்கள். அதற்கு உதுமான் (ரலி) அவர்கள் தந்த விளக்கம் இது: '' அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்வைப் பற்றி எங்களுக்கு என்ன தெரியும்? இருளில் உழன்று கொண்டிருந்த எங்களுக்கு அல்லாஹ்வின் பேரொளியைக் காட்டி, எங்களுக்கு வழி காட்டி, எங்களை நேர்வழியில் செலுத்தியவர்கள் தாங்கள் அல்லவா! தங்களைத்தாமே நாங்கள் நன்கு அறிவோம். அல்லாஹ் என்னும் பேரொளியைத் தங்களின் கண்கள் மூலமாகத்தானே நாங்கள் தெரிந்துகொண்டோம்.'' இதைக் கூறும்போது உதுமான் (ரலி) அவர்களின் நா தழுதழுத்தது, கண்களில் நீர் தளும்பியது.

அல்லாஹ்வின் தூதர் அவர்களை அணுஅணுவாகப் பின் பற்ற வேண்டும் என்னும் ஆவல் உள்ளவராகவும் உதுமான் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஒரு நாள் உளூச் செய்த பின் அவர்கள், புன்முறுவலித்தார்கள். 'எதற்காக இந்தப் புன்முறுவல்?' என மக்கள் வினவியபோது, '' அல்லாஹ்வின் தூதர் அவர்கள் உளூச் செய்த பின் புன்முறுவலுடன் இருக்கக் கண்டேன்'' என்று அவர்கள் பதில் கூறினார்கள். இன்னொரு நாள் இறந்தவர் ஒருவரின் உடலம் தூக்கிச் செல்லப்படுவதைக் கண்டதும் எழுந்து நின்று, ' அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இவ்வாறு செய்வது வழக்கம்' என்று இயம்பினார்கள். மற்றொரு நாள் அஸர் தொழுகைக்கு முன் மக்களுக்கு உளூச் செய்து காட்டி, 'அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இவ்விதமே உளூச் செய்வார்கள்' என்று அறிவித்தார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக இதைத்தான் குறிப்பிட வேண்டும். எந்தக் கையைக் கொண்டு அல்லாஹ்வின் தூதரின்

கையைப் பிடித்து 'பைஅத்' என்னும் பிரமாணம் செய்தார்களோ, அந்தக் கையைக் கொண்டு, அதன் பின் அசுத்தப் பொருள்களையோ, வெட்கத் தலத்தையோ தொட்டது கிடையாது. தூங்கும்போது அந்தக் கை வெட்கத் தலத்தில் பட்டுவிடக்கூடாது என்பதற்காக அதைத் தம் தலைக்குக் கிழே வைத்துக் கொள்வார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் விருப்பத்தை அப்பொழுதே நிறைவேற்றி விட வேண்டும் என்னும் ஆசையும் உள்ளவராய் உதுமான் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அதற்கு ஆதாரமாகும் இந்தச் சம்பவங்கள்! ஒரு சமயம் அரசுத் தூதுவர் ஒருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களைக் காண வந்தார். அரசுத் தூதுவர்களை கௌரவிக்கும் முறையில் அவர்களுக்கு ஏதேனும் அன்பளிப்பு வழங்குவது அவர்களின் வழக்கம். அன்றோ அப்படி வழங்குவதற்கு அவர்களிடம் எந்தப் பொருளும் இல்லை. அது அவர்களின் மனத்தை வருத்தியது. உடனே இதனை உதுமான் (ரலி) அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அக்கணமே தம்மிடமிருந்த உயர்ரகப் போர்வை ஒன்றை அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அளித்தார்கள்.

மதீனத்து அன்ஸார் ஒருவர் வீட்டின் மீது பேரீத்தம் மரம் ஒன்று சாய்ந்து கொண்டு நின்றது. அதனால் அம்மரத்தின் பழங்கள் பல அன்ஸார் வீட்டில் விழுந்து வந்தன. இது அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் அறிவிக்கப்பட்டது. அவர்கள் மரத்தின் சொந்தக்காரருக்கு ஆள் அனுப்பினார்கள். அவர் வந்ததும் அவரிடம் அம்மரத்தை அன்ஸாருக்குக் கொடுத்துவிடும்படியும் அதற்குப் பகரமாக அவருக்கு சுவர்க்கத்தின் ஒரு பேரீத்தம் மரம் கொடுக்கப்படும் என்றும் கூறினார்கள். அதைக் கேட்டு அந்த மரத்தின் சொந்தக்காரர், '' மறுமைக்குப் பதிலாக இம்மையை நான் விற்பேனா? அவ்விதம் நான் அறவே செய்ய மாட்டேன் '' என்று கூறினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த உதுமான் (ரலி) அவர்களின் மனம் பதைத்தது. ' அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஒன்றைக் கூற, அதை ஒருவர் மறுப்பதா?' என்பதே அவர்களின் மனப்பதைப்பிற்குக் காரணம். அந்த மனிதருக்கு அவர்கள் தமக்குச் சொந்தமான ஒரு பேரீத்தம் தோப்பையே பகரமாகக் கொடுத்து, அம்மரத்தை அன்ஸாரிக்கு வாங்கி கொடுத்து, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றினார்கள்.

இத்தகைய அன்பு உதுமான் (ரலி) அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது இருந்ததால், அவர்கள் இறந்து விட்டார்கள் என்பதை அறிந்ததும், அப்படியே அதிர்ந்து என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்து இரண்டு நாட்கள் வரை வாயடைத்துப் போய் விட்டார்கள். அந்த இரண்டு நாட்களில் அவர்களின் வாய்விட்டு ஒரு வார்த்தைகூட வெளி வரவில்லை.



அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராய் இருந்தாலும், அவர்களின் வறிய வாழ்க்கை உதுமான் (ரலி) அவர்களின் மனத்தை அதிகம் வருத்திக்கொண்டேயிருந்தது. அதனால் அவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்புகள் அனுப்பிக்கொண்டே இருந்தார்கள். நான்கு நாட்களாக அண்ணல் நபி (ஸல்) அவர்களும், அவர்களின் குடும்பத்தாரும் பட்டினியாய் இருந்த ஒரு சமயத்தில், அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வீடு வந்து, விஷயத்தை விளங்கிக் கொண்டு தம் வீடு சென்று உணவுப் பொருள்களும், பணமும் ஒட்டகையில் ஏற்றிக்கொண்டு வந்து கொடுத்தார்கள். தொழுதுவிட்டு வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உதுமான் (ரலி) அவர்கள் கொணர்ந்து கொடுத்த அன்பளிப்புகளை அறிந்து, இரு கைகளையும் ஏந்தி இறைஞ்சினர். இது மட்டுமல்ல, உதுமான் (ரலி) அவர்களுக்காக அளவற்ற திருப்தியுற்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறைஞ்சிய சம்பவங்கள் எத்தனையோ இருக்கின்றன. ''ஓர் இரவு அல்லாஹ்வின் தூதர் அருகில் இருந்த நான், விடியும் வரை அவர்கள் உதுமானுக்காக இறைஞ்சிக் கொண்டிருக்கக் கண்டேன் '' என்று அபூ ஸயீதில் குத்ரி (ரலி) அறிவிக்கின்றனர். ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள், 'உதுமானே! அல்லாஹ் உம்முடைய முந்திய, பிந்திய, மறைவான , வெளியான பாவங்கள் அனைத்தையும் மறுமை நாள் வரையிலும் மன்னித்து விட்டான்' எனக் கூறக் கேட்டேன்'' என ஜாபிர் பின் உத்பா (ரலி) அவர்கள் உரைக்கின்றனர்.

''அல்லாஹ்வின் தூதர் அவர்கள், இந்த ஆறு பேர்கள் மீது மகிழ்ச்சியாய் இருக்கின்ற நிலையில் மரித்தார்கள்'' என்று கூறிவிட்டு, உமர் (ரலி) அவர்கள் இவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டார்கள் : ''உதுமான், அலீ, தல்ஹா, ஸுபைர், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப், ஸஃத் பின் அபீ வக்காஸ்.''

'' உண்டு சுவர்க்கம் உமக்கு '' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களால் உலகில் வைத்தே உறுதியளிக்கப்பட்ட ஒருவர் உதுமான் (ரலி) அவர்கள் . அவர்களிடம் அதிமனிதரை அணி செய்யும் அழகிய

பண்புகள் அத்தனையும் அமைந்திருந்தன. அவர்களிடம் பெரிய செல்வம் இருந்தது உண்மை. அதனைத் தாம் ஈட்டியதே இஸ்லாத்திற்காகத் தான் என்று அவர்கள் கூறியிருக்கின்றனர். எனவே தம் செல்வத்தை இஸ்லாமியப் பணிக்காக அள்ளி வழங்குவதில் எல்லாரையும் மிஞ்சியவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். அவ்விதம் அள்ளிக் கொடுத்து, '' பணத்தின் பலன் தாராளமாகக் கொடுப்பது'' என்னும் தம் சொல்லிற்குத் தாமே உதாரணமாக அவர்கள் இலங்கினார்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஓர் அடிமையை விடுதலை செய்வார்கள். அவ்விதம் விடுதலை செய்வது ஒரு வெள்ளிக் கிழமையில் விடுபட்டுப் போனால், அடுத்த வெள்ளிக்கிழமை இரண்டு அடிமைகளுக்கு விடுதலை வழங்கி விடுவார்கள். தம்மிடம் அடிமைகள் இல்லையாயின், பிறரின் அடிமைகளுக்கு விடுதலைப் பணம் கொடுப்பார்கள்.

தம் உதவி நாடி, தம்மைத் தேடிவருபவருக்கும் அவர்கள் வாரிக் கொடுப்பார்கள். தம் உதவி நாடி வராதவர்களைத் தாம் தேடிச் சென்று கொடுப்பார்கள். அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் இறப்புப் படுக்கையில் இருந்து கொண்டிருக்கின்றனர் என்பதை அறிந்ததும் அவர்களைக் காண உதுமான் (ரலி) அவர்கள் சென் றார்கள். அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்களைப் பார்த்து, ''அப்துல்லாஹ்! உமக்கு இப்பொழுது என்ன தேவை?'' என்று அனுதாபத்துடன் கேட்டார்கள். '' என் பாவங்களைக் குறித்துத்தான் நான் முறையிடுகிறேன்'' என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) கூறினர். ''இப்பொழுது உமக்கு என்ன வேண்டும்?'' என்று அவர்கள் மீண்டும் கேட்டார்கள். ''என் ரப்பின் அருள்தான் தேவை'' என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) கூறினார். ''உமக்காக நான் மருத்துவரை அழைக்கலாமா?'' என்று அவர்கள் கேட்டார்கள். ''மருத்துவன்தான் என்னை நோயாளியாக்கி இருக்கிறான்'' என்று அப்துல்லாஹ் மஸ்வூத் (ரலி) அவர்கள் கூறினர். ''உமக்கு ஏதேனும் நன்கொடை தருவதை நீர் விரும்புகிறீரா? உமக்குள்ள செலவுகளுக்கு அதைப் பயன்படுத்தலாம் அல்லவா?'' என்று அவர்கள் கூறினார்கள். '' அது தேவை இல்லை'' என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் கூறினர். ''உம் புதல்விகளுக்கேனும் நான் ஏதேனும் கொடுக்கலாமா?'' என்று அவர்கள் கேட்டார்கள். ''அவர்களுக்குத் தேவை இல்லை. அவர்களின் தேவைக்கு நான் முன்பே



கொடுத்திருக்கிறேன். (மேலும்) உங்களுக்குத் தேவை ஏற்படும்போது, ஸூரத்து வாக்கிஆவை ஓதிக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லி இருக்கிறேன். 'எவர் ஸூரத்து வாக்கிஆவை ஒவ்வோர் இரவிலும் ஓதுகிறாரோ, அவருக்கு ஒரு போதும் பட்டினி ஏற்படாது' என்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்'' என்று அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அறிவித்து, அந்தப் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தனர்.

தம்மிடம் கடனாகப் பெற்ற தொகைகளைக் கூட உதுமான் (ரலி) அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள விரும்புவதில்லை. தல்ஹா (ரலி) அவர்களுக்கு, அவர்கள் 50,000 திர்ஹம் கடனாகக் கொடுத் திருந்தார்கள். சிரியா சென்று வாணிபம் செய்து திரும்பியதும், தல்ஹா (ரலி) அவர்கள் அப்பணத்தை உதுமான் (ரலி) அவர்களிடம வந்து கொடுத்தபோது, அதைப் பெற்றுக்கோள்ள அவர்கள் கண்டிப்பாக மறுத்து விட்டார்கள். ''நான் அதனை உமக்கு அன்பளிப்பாகத் தந்தேனேயன்றிக் கடனாகத் தரவில்லை'' என்று அவர்கள் உறுதியாக உரைத்து விட்டார்கள்.

அரபு நாட்டிற்கு அடிக்கடி வரும் அதிதியாகும் பஞ்சம். அவர்களின் ஆட்சி காலத்திலும் ஒரு பஞ்சம வந்தது. அதன் கடுமை அதிகமான போது, மக்கள் தங்களின் உடைமைகளைக் குறைந்த விலைக்கு விற்கத் தொடங்கினார்கள். அப்பொழுது ஒரு தோட்டம் விற்பனைக்கு வந்தது. அவர்களின் மனைவி அந்தத் தோட்டத்தை விலைக்கு வாங்கும்படி வற்புறுத்தினார். அவர்களும் அதனை விலைக்கு வாங்குவதற்காகப் பணத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள். செல்லும் வழியில் மக்கள் பஞ்சத்தால் படும் அவதி அவர்களின் பார்வையில்பட்டது. அவர்களுக்கு அழுகை வந்து விட்டது. உடனே தாம் கொண்டு சென்ற பணத்தை மக்களுக்கு பகிர்ந்து கொடுத்து விட்டு வீட்டிற்கு வந்தார்கள். அவர்களைக் கண்டதும் அவர்களின் மனைவி ஆவலுடன், '' தோட்டம் வாங்கி விட்டீர்களா?'' என்று கேட்டார். ''ஆம்! வாங்கினேன் சுவர்க்கத்தில்'' என்று அவருக்கு அவர்கள் அமைதியாகப் பதில் கூறினார்கள்.

அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்திலும் ஒரு பஞ்சம் வந்தது. அதன் கொடுமை அதிகரித்தபோது, மக்களுக்கு உணவுப் பொருள்கள் கூடக் கிடைக்கவில்லை. அப்பொழுது வணிகக் கூட்டம் ஒன்று வருவதை மதீனா வணிகர்கள் அறிந்தனர். மதீனா வணிகர்களின்

தலைவராக உதுமான் (ரலி) அவர்கள் இருந்தனர். வணிகக் கூட்டம் மதீனா எல்லை அடையும் முன்பே வணிகர்கள் உதுமான் (ரலி) அவர்களை மதீனாவில் சந்தித்து, உணவுப் பொருள்களுக்கு விலை பேசினர். ''நீங்கள் என்ன இலாபம் தருவீர்கள்?'' என்று உதுமான் (ரலி) அவர்கள் கேட்டனர். 'பத்திற்குப் பன்னிரண்டு' என்று மதீனா வணிகர்கள் பதில் கூறினார்கள். ' எனக்கு அதையும் விட அதிகம் கிடைக்குமே?' என்று உதுமான் (ரலி) அவர்கள் உரைத்தனர். 'அவ் விதமாயின், நாங்கள் பத்திற்குப் பதினைந்து தருகிறோம்' என்று மதீனா வணிகர்கள் பகர்ந்தார்கள். 'அதையும்விட அதிகம் எனக்குக் கிடைக்குமே' என்று உதுமான் (ரலி) அவர்கள் உரைத்தனர். 'இதையும் விட அதிகம் தரும் வணிகர்கள் யார்? மதீனா வணிகர்கள் அனைவரும் இங்கு இருக்கிறோம்' என்று மதீனா வணிகர்கள் பகர்ந்தார்கள்.

இதைக் கேட்டுவிட்டு உதுமான் (ரலி) அவர்கள் இவ்விதம் கேட்டார்கள், ''அல்லாஹ் எனக்குக் கூடுதல் இலாபம் தருவதாக வாக்குறுதி வழங்கியிருக்கிறான். அவன் ஒன்றிற்குப் பத்து தருவதாகக் கூறியிருக்கிறான். அதையும் விட அதிகம் தர எவருக்கேனும் இயலுமா?'' உதுமான் (ரலி) அவர்களின் கேள்விக்கு மதீனா வணிகர் களால் பதில் பகர இயலவில்லை. உதுமான் (ரலி) அவர்கள் தானியம் முழுவதையும் விலைக்கு வாங்கி, மக்களுக்குத் தானமாக அள்ளிக் கொடுத்தார்கள்.

உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்திலும் ஒரு கொடிய பஞ்சம் வந்தது. பஞ்சத்தின் கடுமையைத் தணிக்க கலீபா உமர் (ரலி) அவர்கள், பல வழிகளிலும் தானியங்கள் பெற முயன்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது உதுமான் (ரலி) அவர்களுக்குத் தானியங்கள் வந்திருப் பதாக உமர் (ரலி) அவர்களுக்கு தகவல் வந்தது. உடனே எழுந்து சென்று உதுமான் (ரலி) அவர்களைக் கண்டு, அந்தத் தானியங்களை அரசாங்கத்திற்கு விலைக்குத் தரும்படிக் கேட்டார்கள். ''இல்லை. வெளியே அதிக விலைக்குக் கேட்கிறார்கள்'' என்றார் உதுமான் (ரலி). ''நான் அவர்கள் கேட்பதை விட இரு மடங்கு விலை தருகிறேன்'' என்றார்கள் உமர் (ரலி). ''இல்லை. அது மிகவும் குறைந்த விலை'' என்றார்கள் உதுமான் (ரலி). ''சரி. நான்கு மடங்கு விலை தரு கிறேன்.'' என்றார்கள் உமர் (ரலி). ''வெளியில் எனக்கு அதிக விலை தருவதற்குத் தயாராய் இருக்கிறார்கள்'' என்றார்கள் உதுமான் (ரலி). ''முன்பெல்லாம் நீர் பெரிய வள்ளலாய் இருந்தீர். ஏன் உம் மனம் இப்பொழுது இப்படிக் கெட்டு விட்டது?'' என்று உமர் (ரலி)



அவர்கள் கேட்டுவிட்டு, ''சரி. எட்டு மடங்கு விலை தருகிறேன்'' என்று கூறினார்கள். ''முடியாது'' என்று சொல்லி விட்டு உதுமான் (ரலி) அவர்கள் எழுந்து போய் விட்டார்கள்.

உமர் (ரலி) அவர்களுக்கோ கடும் கோபம். எனினும் அவர்கள் உதுமான் (ரலி) அவர்களுக்கு எதிராக ஒரு வார்த்தையும் பேசவில்லை. ' ஏன் உதுமான் இப்படி நடந்து கொண்டார்?' என்பது அவர்களுக்குப் புரியாத புதிராகவே இருந்தது. அந்தப் புதிர் அக்கணமே உடைந்தது உதுமான் (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பைக் கேட்டதும் : ''உதுமானுக்கு கோதுமை வந்திருக்கிறது. உணவு தானியங்களை விலை கொடுத்து வாங்க வசதியில்லாத எல்லாச் சகோதரர்களும், இன்று முதல் உதுமானின் இல்லத்திலிருந்து தங்களுக்குத் தேவையான தானியங்களைப் பெற்றுச் செல்லலாம்.'' அன்று மாலை உமர் (ரலி) அவர்களை உதுமான் (ரலி) அவர்கள் கண்டபோது ''அந்தத் தானியங்களை நான் நல்ல விலைக்கு விற்றுவிட்டேன். தாங்கள் அரசாங்கத்துடன் வாணிபம் செய்யயும்படிக் கூறினீர்கள். நானோ அரசாங்கங்களுக்கெல்லாம் மேலான அரசாங்கத்தின் அதிபதியான அல்லாஹ்வுடன் வாணிபம் செய்துவிட்டேன்.'' என்று கூறினார்கள்.

இவ்விதம் உள்ளத்தில் ஊற்றையும், கைகளில் ஆற்றையும் பெற்றிருந்ததால், உதுமான் (ரலி) அவர்களுக்கு மறுமையில் 'தர்மம்' என்னும் கொடி கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

அவர்கள் தாம் கலீபாவாக இருந்தபோது, அரசாங்கப் பொது நிதியிலிருந்து உதவிப் பணமாக ஒரு திர்ஹம் கூட எடுத்துக் கொள்ள வில்லை. தம் வருவாயைக் கொண்டே அவர்கள் வாழ்ந்தார்கள். வாணிபத்தின் மூலமும், கைபரில் அவர்களுக்குக் கிடைத்த நிலத்தி லிருந்தும் அவர்களுக்கு வருவாய் வந்து கொண்டிருந்தது.

பெரும்பாலும் தம் பொருளைக் கொண்டே பிறருக்கு விருந்து கொடுப்பார்கள். சில சமயங்களில் பொது நிதியிலிருந்தும் விருந்து கொடுப்பதுண்டு. பொது நிதியிலிருந்து விருந்து கொடுக்கும் போது, அவர்கள் விருந்தினனர்களுடன் அமர்ந்து சாப்பிடக் கண்டிப்பாக மறுத்து விடுவார்கள். அதற்குக் காரணம், பொது நிதி உணவைத் தாம் உண்ணக் கூடாது என்று அவர்கள் கொண்டிருந்த கொள்கை.

அவசியமான காரியத்திற்கு ஆயிரமாயிரமாய் அள்ளிக் கொடுத்த அவர்கள், அவசியமற்ற காரியத்திற்கு அரை திர்ஹம் கூடச் செலவிட

மறுத்தார்கள். அதற்கு ஆதாரம் இந்தச் சம்பவம்; ஒருவர் வளமடை யலாம் என எண்ணி, வாணிபம் செய்ததில், இழப்பு ஏற்பட்டுப் பெரும் கடனாளியாகி விட்டார். அவரைக் கடன்காரர்கள் அதிகம் தொல்லைப் படுத்த ஆரம்பித்தார்கள். அவர்கள் அளித்த தொல்லை பொறுக்கும் எல்லையைக் கடந்து விட்டபோது அவரின் கால்கள் உதுமான் (ரலி) அவர்களின் வீட்டை நோக்கி நடந்தன.

அப்பொழுது மாலை நேரம். ஊழியர் ஒருவர் விளக்கைத் துடைத்து, அதற்குத் திரி போட்டுக் கொண்டிருந்தார். அவர் போட்ட திரி சற்றுப் பெரியதாக இருந்தது. அதைப் பார்த்து விட்டார்கள் உதுமான் (ரலி) அவர்கள். அவரிடம் அவர்கள், ''ஏன் சற்று மெல்லிய திரியை உபயோகப்படுத்தக் கூடாது?'' என்று கூறினார்கள்.

அவர்களிடம் உதவி கோர வந்தவர், இதைக் கவனித்து விட்டார். அப்பொழுதே அவருக்கு தமக்குத் தாராள உதவி கிடைக்கும் என்னும் நம்பிக்கை தளர்ந்து விட்டது. 'விளக்குக்குத் திரி போடுவதில் இப்படிக் கருமித்தனம் காட்டக் கூடிய இவரா நமக்கு உதவப் போகிறார்?' என்னும் எண்ணம் அவரின் உள்மனத்தில் ஓடியது. 'விடிவில்லை நம் துயரத்திற்கு' என்னும் வருத்தத்துடன் அவர் வந்த வழியிலேயே நடையைக் கட்டினார். அவர் நடையைக் கட்டியதை நிறுத்தியது உதுமான் (ரலி) அவர்களின் அழைப்பு. அவர் வந்ததையும், நின்ற தையும் கவனித்துக் கொணடிருந்த அவர்கள், அவர் நடையைக் கட்டி யதும், 'ஏன் நம்மிடம் வந்தவர் எதுவும் கூறாது திரும்புகிறார்?' என்று எண்ணித்தான் அவரை அவர்கள் அழைத்தார்கள். அவர் வேண்டா வெறுப்புடன் திரும்பி வந்தார்.

அவர் தம் நிலையையும், அதனால் தாமுறும் அவதியையும் உரைத்ததுதான் தாமதம். உதுமான் (ரலி) அவர்களின் உள்ளம் உருகி விட்டது. உடனே அவர்கள் உள்ளே சென்று ஒரு பெரும் தொகையைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார்கள். அதைக் கண்டு விண்டிட முடியாத அளவு வியப்பு ஏற்பட்டது அவர் உள்ளத்தில். அதனால் அவர் தம் அதரம் பிளந்து, ''அமீருல் முஃமினீன் அவர்களே! விளக்கின் திரி விஷயத்தில் தாராளம் காட்டாத தாங்கள், என் விஷயத்தில் எப்படித் தாராளமாக நடந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டபோது உதுமான் (ரலி) அவர்கள் உதிர்த்த சொற்கள்; ''சகோதரரே! இது அவசியமான செலவு, அது அநாவசியமான செலவு.''



அழகுபடுத்திய இனிய இயல்புகள் இன்னும் எத்தனையோ இருந்தன. அரசர்கள் அளவு செல்வந்தராய் அவர்கள் இருந்தும், அவர்கள் எளிமையுடன் வாழ்ந்தார்கள். செல்வர்கள் என்ன உண்கி றார்கள் என்று எல்லோரும் எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால், அவர்கள் தம் ஆடையில்தான் தம் ஆடம்பரத்தை அதிகம் காட்டுவார்கள். ஆனால் உதுமான் (ரலி) அவர்கள் ஏழைகள் அணியும் எளிய ஆடையே அணிந்தார்கள்.

அவர்கள் பஞ்சணையில் படுத்தது கிடையாது. அவர்களின் போர்வைக்கு இரு பணிகள் உண்டு. உடலில் பிரித்துப் போட்டுக் கொள்ளும்போது அது போர்வை. தலைக்குக் கீழ் மடித்து வைத்துக் கொள்ளும்போது அது தலையணை. அந்தப் போர்வைக்கு இன் னொரு பணியும் இருந்தது. தம்மைக்காண வருபவரை அதில் அமரச் சொல்வது அவர்களின் வழக்கமாகும். அதற்கு ஆதாரம் ஹஸன் (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பு; ''அவர்கள் தம் போர்வையைத் தலைக்குக் கீழ் வைத்துப் படுத்திருக்கக் கண்டேன். அவர்களிடம் சிலர் அடிக்கடி வந்து அளவளாவி விட்டுச் சென்றனர். அவர்கள் வரும் போதெல்லாம் கலீபா எழுவார்கள். தம் போர்வையை விரித்து, அதில் அவர்களை அமரச் சொல்லி உரையாடுவார்கள்.'' மெல்லிய போர்வை பிரித்துக் கொண்டு போர்த்திக் கொள்ளும்போது இதமாக இருந்தாலும் விரித்துக் கொண்டு படுத்துக் கொள்ளும்போது பதமாக இருப் பதில்லை. அதற்குக் காரணம், போர்வைக்குக் கீழ் கிடக்கும் சிறு கற்கள் அவர்களின் உடலைப் பதம் பார்த்ததாகும். எனவே, படுத்து விட்டு எழும் போது, அவர்களின் உடலில் கற்கள் அழுத்திய அடையாளங்கள் அப்படியே இருந்து கொண்டிருக்கும். அவர்கள் தம் வேலையைத் தாமே பார்த்துக் கொள்வார்கள். ஊழியர்கள் இருந் தாலும், எடுத்ததற் கெல்லாம் அவர்களை ஏவ மாட்டார்கள். நள்ளிரவுத் தொழுகைக்கு எழுந்தால், ஊழியர்களின் உறக்கம் கெட்டுவிடக் கூடாது என்பதற்காக எல்லா வேலையையும் தாமே செய்து கொள்வார்கள்.

இவ்வித எளிமைக் குணம் அவர்களிடம் இருந்ததற்குக் காரணம், அணுவளவும் கர்வம் அவர்களின் உள்ளத்தில் அமைந்திராததாகும். கர்வம், தம்மை இறைவனை விட்டே அகற்றி விடும் என்று அவர்கள் அஞ்சினார்கள். அதற்கு ஆதாரம் அவர்களின் இந்த உரை; ''உலகம் கர்வம் உள்ளது. எனவே அதை விட்டு அகல்! இல்லையேல் அது தன் மாயத்தால் உன்னைப் போர்த்தி விடும்; உனக்குப் பெருமையைக்

கற்றுக் தந்து விடும். அந்தப் பெருமை உன்னை இறைவனிடமிருந்து விலக்கி விடும்.''

கர்வம், தம் இதயத்தில் இடம் பிடித்துக் கொள்ளக் கூடாது என்பதில் அவர்கள் எச்சரிக்கையாய் இருப்பார்கள். ஒரு நாள் அவர்கள் தம்முடைய பேரீச்சம் தோட்டத்திலிருந்து, தம் தலையில் விறகைச் சுமந்து கொண்டு வந்தார்கள். ஏராள அடிமைகளுக்குச் சொந்தக்காரரான கலீபா இவ்விதம் வருவதைக் கண்டு ஒருவர், ''ஏன் இதைச் செய்தீர்கள்? என்று கேட்டபோது 'என்னையே சோதித்துக் கொள்ள விரும்பினேன்' என்று அவர்கள் பதில் கூறினார்கள்.

கர்வம் இருப்பவர்களிடம் நாணம் இருக்காது. அணுவளவும் கர்வம் இல்லாதவர்களாய் இருந்ததால், அவர்களிடம் பெரும் அளவு நாணம் இருந்தது. அவர்களின் நாணத்தை அண்ணல் நபி (ஸல்) அவர்களே அங்கீகரித்திருக்கின்றனர் என்பதற்கு, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் இந்தச் சொற்களே ஆதாரம்; ''என் உம்மத்தவர் மீது அதிக இரக்கமுள்ளவர் அபூபக்ர், சன்மார்க்க விஷயத்தில் அதிக வன்மை யுள்ளவர் உமர், நாணத்தில் அவர்களில் மிகவும் அதிகமானவர் உதுமான்.'' அவர்களின் நாணத்தை அண்ணல் நபி (ஸல்) அவர்களே மதித்திருக்கின்றனர் என்பதற்கு இந்தச் சம்பவம் சான்று; ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) அவர்களைப் பார்க்க அபூபக்ர் (ரலி) அவர்களும் வந்தார்கள், உமர் (ரலி) அவர்களும் வந்தார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் வீட்டில் படுத்திருந்தார்கள். அப்பொழுது அவர்களின் கீழாடை சற்று விலகிக் கால்கள் திறந்திருந்தன. தம் இரு தோழர்கள் வந்தபோதும், தம் கால்களை மறைத்துக் கொள்ளாமலேயே உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கு உதுமான் (ரலி) அவர்கள் வந்தபோது, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எழுந்து தம் ஆடையைச் சரி செய்து, தம் கணுக்காலை மூடிக் கொண்டார்கள். இதுபற்றி ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டபோது அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ''அமரர்களும் நாணமுறும் அவர்களிடம், நான் நாணமுற வேண்டாமா?'' என்று கேட்டு விட்டு, ''அவர் மிகவும் நாணமுடையவர். கூச்சப்பட்டுக் கொண்டு அவர் தாம் கூற வந்ததைக் கூறாமல் இருந்துவிடலாம்'' என்று சொன்னார்கள்.

எப்பொழுதும் உதுமான் (ரலி) அவர்கள் தம் உறுப்புக்களை முழுமையாக மறைத்துக் கொள்ளும் விதமே ஆடை அணிந்திருப்பார்கள். மூடிய அறைக்குள் குளிக்கும்போது கூட, அவர்கள் தம் ஆடையை



அகற்றிக் கொள்வதில்லை. பிறர் பார்வை பட்டுவிடக் கூடாது என்பதற்காக, அவர்கள் உடை மாற்றும்போது கூட உஷாராய் இருப்பார்கள்.

நாணத்திற்கு அடுத்தபடியாக, உதுமான் (ரலி) அவர்களிடம் இருந்த உதார குணம் பொறுமையாகும். தம்மீது அவதூறு பேசப்பட்டபோதும், தம்மீது வாள் வீசப்பட்ட போதும் அவர்கள் தம் பொறுமையை இழந்து விடவில்லை.

ஒருநாள் அவர்கள் குத்பாப் பேருரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர், ''உதுமானே! செய்த பிழைக்கு அல்லாஹ்வுக்காக வருத்தப்படும்! தவறாகச் செல்வதிலிருந்ததும் விலகியிரும்!'' என்று கத்தினார். அவர் இவ்விதம் கத்தியது கத்திபோல் அவர்களின் உள்ளத்தில் பாய்ந்தாலும், அதைப் பொறுமையோடு சகித்துக் கொண்டு, கிப்லாவின் பக்கம் தம் முகத்தைத் திருப்பிக் கொண்டு, ''அல்லாஹ்! நான் புரிந்த பிழைக்கு உன்முன் வருந்துவதில், உன் பக்கம் திருந்துவதில் நான் முதல்வன்'' என்று கூறினார்கள். ''எல்லாச் சூழ்நிலைகளிலும் மனிதன் பொறுமையுடன் இருக்க வேண்டும். இல்லையேல் அவன் அவமதிப்புக்கு ஆளாக நேரும்'' என்று அவர்கள் கூறினார்கள்.

பொறுமையாளராய் இருந்த அவர்கள் பக்கம் கோபமே போவதில்லை. மனிதனுக்குக் கோபம் ஏற்படும்போது, அவன் ஏதேனும் தவறாக மொழிந்து விடுகிறான், ஏதேனும் தவறு புரிந்து விடுகிறான். எனவே அவர்கள் கோபப்படும் விஷயத்தில் எப்பொழுதும் எச்சரிக்கையாய் இருப்பார்கள். ''கோபத்திற்கு மேலான மருந்து, கோபம் வரும்போது பேசாமல் இருந்து விடுவது'' என்று அவர்கள் கூறினார்கள். ஆத்திரத்தில் ஏதேனும் பேசி அவதிக்குள்ளாகக் கூடாது என்பதற்காக, இந்த எச்சரிக்கையை எடுத்துக் கொண்டார்கள். 'நாவின் தவறுதல், கால் வழுக்குவதைவிட அதிகமானது' என்றும், 'கூரிய வாளின் காயம் உடலின் மீது விழும், (கூறிய) தீய வார்த்தையின் காயம் உயிரின் மீது விழும்' என்றும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இப்படி எச்சரிக்கையாய் இருந்தும், அவர்களால் ஒரு சமயம் தம் கையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்களின் அடிமைகளில் ஒருவர் ஏதோ தவறு செய்து விட்டார். அது அவர்களை ஆத்திரம் கொள்ள வைத்து விட்டது. அவர்கள் அந்த அடிமையின் காதைப் பிடித்து முறுக்கி விட்டார்கள். அவர்கள் அதிகமாகத்தான் முறுக்கி விட்டார்களோ, என்னவோ, அவன் 'ஆ' என்று கதறியதுமே, உதுமான்

(ரலி) அவர்களின் ஆவி நடுங்கி விட்டது. அதனால் அவர்களின் தலை சுற்ற ஆரம்பித்தது. தலைசுற்று சற்று நிற்கட்டும் என்று சற்று நேரம் அவர்கள் தலைகுனிந்தபடியே அமர்ந்திருந்தார்கள். தாம் புரிந்தது பெரிய பிழை என அவர்களின் இதயம் அவர்களை இடித்து இகழ்ந்தது, பிடித்துப் பிழிந்தது.

அவர்கள் எழுந்தார்கள். ''ஆ' என்னும் சப்தத்தைக் கொண்டு, என் மனத்தைப் புண்படுத்தி விட்டாய்'' என அந்த அடிமையைப் பார்த்துப் பகர்ந்தார்கள். அதன் பின் ''நான் உன் காதை முறுக்கியதைப் போல், என் காதை நீ பிடித்து முறுக்கு!'' என்று கூறினார்கள். அதைக் கேட்டு அந்த அடிமை அதிர்ந்தான், அவ்விதம் செய்ய மறுத்தான். 'என் சொல்லைக் கேட்பது உன் கடமை' என்று அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்டு அவன், அதிகமான மனக் கஷ்டத்துடன் அவர்களின் காதைப் பிடித்து முறுக்கினான். 'நாம் முறுக்கியது போல் அவன் முறுக்கினால் 'ஆ' என்னும் குரல் நம் வாய் வழியே வந்திருக்குமே' என எண்ணி அவர்கள், அவனைப் பார்த்து, 'நன்றாக முறுக்கு' என்றார்கள். அவன் முறுக்கினான். இன்னும் 'நன்றாக முறுக்கு! இகத்திலேயே பகரம் கிடைத்து விடுவது எவ்வளவோ நல்லது. ஆகிரத்தில் எவ்விதப் பிடியும் இராதல்லவா?' என்று அவர்கள் கூறியபோது, ''மறுமை நாளில் நான் வழக்கிட்டால் பதிலுக்குப் பதில் செய்யப்படும் என்பதற்குப் பயந்துதானே இப்படிச் செய்யும்படிச் சொல்கிறீர்கள். நீங்கள் முறுக்கியதை விட அதிகமாக முறுக்குவதற்கு நான் பயப்படுகிறேன்'' என்று அந்த அடிமை அறிவித்தான். அதைக் கேட்டு அவர்கள் கண்ணீர் வடித்தார்கள். அக்கணமே அந்த அடிமையின் அடிமைத் தளையையும் ஒடித்தார்கள்.

அல்லாஹ்வின் படைப்பில் மிகவும் நன்றி கெட்டவன் மனிதன் அல்லவா? அது அவர்களை ஆத்திரம் கொள்ள வைக்கிறது. அதனால் தான் அவர்கள், ''மனிதனே! அல்லாஹ்வை வணங்க உனக்குப் பிரியமில்லை என்றால், அவன் படைத்த பொருள்களைப் பயன் படுத்தாதே!'' என்று சீறினார்கள்.

கூலியை ஒருவனிடமிருந்து பெற்றுக் கொண்டு, வேலையை வேறொருவனுக்குச் செய்யும் குணம் மனிதன் கூடப் பிறந்ததல்லவா? அதுவும் அவர்களைக் கோபம் கொள்ள வைக்கிறது. அதனால்தான் அவர்கள், ''மனிதனே! அல்லாஹ் உன்னைத் தனக்காகப் படைத்தான். நீயோ வேறொருவனுக்கு வேலை செய்கிறாய்'' என்று சினந்தார்கள்.



தன்னைப் படைத்தவனைப் பற்றிப் பாராமுகமாய் இருப்பது, மனிதனுடன் இணைந்த இழிகுணமல்லவா? அதுவும் அவர்களைச் சினம் கொள்ளச் செய்தது. அதனால்தான் அவர்கள், ''விலங்குகூடத் தன் எஜமானனை அறிந்து கொள்கிறது. மனிதன் தன்னைப் படைத் தவனைத் தெரிந்து கொள்ளவில்லையே?'' என்று பரிதாபப்பட்டார்கள்.

இவ்வித மனநிலையுள்ளவர்களாய் இருந்ததால், அவர்கள் நான்கு விஷயங்களை அவசியமானவை எனப் போற்றினார்கள், நான்கு விஷயங்களை அவசியமற்றவை எனத் தூற்றினார்கள். அவர்கள் போற்றியவை இவை; ''1. தகுதியானவர்களுடன் சேர்ந்திருப்பது பாராட்டிற்குரியதுதான், ஆனால் அவர்களைப் பின்பற்றுவது அவசியமானதாகும். 2. குர்ஆனை ஓதுவது உயர்ந்த செயல்தான், ஆனால் அதில் சொல்லப்பட்டுள்ளது போல் நடப்பது கடமையானதாகும். 3. நோயாளிகளைப் போய்ப் பார்ப்பது, போற்றுதற்குரியது தான்,ஆனால் அவர்கள் உத்திரவிட்டதைச் செய்வது அவசியமானதாகும். 4. பெரியோர் அடக்கத் தலங்களைப் பார்ப்பது பக்தியானதுதான், ஆனால் இறப்பிற்கு ஆயத்தமாவது கட்டாயமானதாகும்.''

அவர்கள் தூற்றியவை இவை; ''1.பின்பற்றப்படாத அறிவு, 2. செலவிடப்படாத செல்வம், 3. உலக ஆசையைப் பின்புறம் கொண்ட பக்தி,4. நற்செயல்களை இறுதியில் கொண்டிராத நீண்ட ஆயுள்.''

அவர்கள் உலகின் இன்ப, துன்பங்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து ஆச்சரியப்படத்தக்கதாகும். அவர்கள் உலகின் இன்பம் பற்றி இவ்வாறு கூறியிருக்கிறார்கள்; ''இந்த உலகின் இன்பத்தை அனுபவிப்பதால் மறுவையின் பலன் குறைந்து விடுகிறது.'' உலகின் துன்பம் பற்றி இவ்வாறு இயம்பியிருக்கிறார்கள்; ''எவனுக்கு ஆண்டு முழுவதும் ஒரு கஷ்டமோ, துன்பமோ வரவில்லையோ, அவன் அறிந்து கொள்ளட்டும். அவனை விட்டு அல்லாஹ் விலகிவிட்டான் என்பதை.''

அவர்கள் முற்றிலும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடி பணிந்த அடிமையாகவே இருந்தார்கள் அதற்கு ஆதாரம் அவர்களின் இந்த உரை;''அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணி நடந்து கொள்வதும், எவருக்கேனும் வாக்குறுதி கொடுத்திருந்தால் அதை நிறைவேற்றுவதும், எது கிடைக்கிறதோ, அதைப் பொருந்திக்

கொள்வதும், கிடைக்கா விட்டால் பொறுமை காப்பதும் அடிமைத்தன்மை எனப்படும்.''

இத்தகைய உத்தம குணங்களின் உறைவிடமாக இருந்ததால் அவர்களுக்கு மறைவான விஷயங்களைக் கூட அறிந்து கொள்ளும் மனப்பக்குவமும் ஏற்பட்டிருந்தது. ஒருநாள் அவர்களின் சபைக்கு ஒருவர் வந்தார். அவரைப் பார்த்ததும் அவர்கள் அங்கிருந்தவர்களை நோக்கி, ''உங்களில் ஒருவர் விபச்சாரத்தின் அடையாளம் தம் நெற்றியில் இருக்க வந்திருக்கிறார்'' என்றார்கள். அவர்களின் இந்த சொற்களைக் கேட்டதும், அந்த மனிதர் திடுக்கிட்டார். அவர் வரும்போது அவரின் பார்வை அவர் அறியாமலேயே ஒரு பெண்மீது விழுந்து விட்டது. அதனைக் கலீபா அவர்கள் எப்படி அறிந்து கொண்டார்கள் என்னும் ஆச்சரியத்துடன் அவர், ''அமீருல் முஃமினீன் அவர்களே! அல்லாஹ்வின் தூதருக்குப் பிறகும் வஹீ வருமா? அப்படியில்லை எனில் என் இரகசியத்தை எப்படி அறிந் தீர்கள்?'' என்று கேட்டபோது, அவர்கள் அளவற்ற அடக்கத்துடன் அறிவித் தார்கள், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களுக்குப் பிறகு வஹீ வருவ தில்லை. அல்லாஹ் பேரில் நான் உண்மை கொண்டு அறிந்த ஈமானின் தெளிவில், எனக்குக் கிடைத்த மெய் அறிவின் ஒளியில் தோன்றி யிருக்கும்.''

ஒருநாள் அவர்களிடம் ஒரு பெண் வந்து,''நான் விபச்சாரம் செய்து விட்டேன், எனக்குத் தண்டனை தாருங்கள்!'' என்று வேண் டினாள். அவளை அவர்கள் விரட்டுமாறு தம் அடிமையிடம் கூறினார்கள். இவ்விதம் அவர்கள் அவளை மூன்று முறை விரட்டியும், அவள் தனக்குத் தண்டனை தரும் படியே வேண்டிக் கொண்டிருந்தாள். அவளுக்கு உணவும், உடையும் கொடுத்துச் சில நாட்கள் தங்கும்படிச் செய்தபின், அவளுக்கு அவர்கள் ஒரு கழுதைச் சுமை உணவுப் பொருள் கொடுத்து, அவளை அவள் கூட்டத்தாரிடம் சேர்த்து விடும்படித் தம் அடிமைக்கு ஆணையிட்டார்கள். அடிமை அவளிடம், ''உண்மையில் நீ விபச்சாரம் செய்தாயா?'' என்று கேட்டபோது, அவள் தாங்க முடியாத வறுமையின் காரணமாக அவ்விதம் கூறியதாகவும் விபச்சாரக் குற்றத்திற்காகத் தான் கொல்லப்பட வேண்டும் என்பதற்காகவே அவ்விதம் செய்ததாகவும் தெரிவித்தாள்.

ஒருநாள் அவர்களிடம் இரு பெண்கள் வந்தனர். அவர்களுக் கிடையில் ஒரு தாவா. எவள் தன் கணவன் மீது அதிக அன்பு உள்ளவள் என்று. அவர்களால் அதைத் தீர்க்க முடியாமல் போகவேதான், அவர்கள் கலீபாவின் கருத்தை அறிவதற்காக அவர்களிடம் வந்தனர். கலீபா அவர்கள் அவ்விரு பெண்களையும் பார்த்து, ''உங்கள் இருவரின் தலையையும வெட்ட உத்திரவிடப் போகிறேன்'' என்று கூறினார்கள். உடனே ஒருத்தி, ''என்னை வெட்டாதீர்கள், விட்டு விடுங்கள்! நான் என் கணவருக்கு கியாம நாள் வரை பணிவிடை செய்ய விரும்புகிறேன்'' என்று கத்தினாள். அடுத்தவள், ''என் தலையை வெட்டி விடுங்கள்!'' என்று அமைதியாகக் கூறினாள். கலீபா அவர்கள் இரண்டாமவள் தான் உண்மையானவள் என்றும், முதலாமவள் பொய்யுரைப்பவள் என்றும், தீர்ப்புக் கூறினார்கள். அவர்கள் அவ்விதம் தீர்ப்புக் கூறியதற்கு காரணம், முதலாமவள் ''நான் கியாம நாள் வரை பணிவிடை செய்ய விரும்புகிறேன்'' என்றதாகும். கியாம நாள் வரை அவள் உயிருடன் இருப்பாளா? அவ்வாறாயின் அவள் பொய் உரைப்பவள் அல்லவா?



### மண வாழ்வு

உதுமான் (ரலி) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் புதல்வி ருகையா (ரலி) அவர்களை முதலில் மணந்தனர். ருகையா (ரலி) இறந்ததும், அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மற்றொரு புதல்வியான உம்மு குல்தூம் (ரலி) அவர்களை மணந்தனர். அவர்களும் இறந்ததும், ஃபக்தா பின்த் வலீத், உம்மே அம்ர் பின்த் ஜுன்துப், பாத்திமா பின்த் ஷைபாஹ், உம்மிபனீன் பின்த் உவைனாஹ், ரம்லாஹ் பின்த் ஷைபாஹ், ஆயிஷா, உம்மே அஃபான், நாயிலா பின்த் ஃபரஃப்ஸாஹ் ஆகிய பெண்களை மணந்து வாழ்ந்தனர். இந்த மனைவிகள் மூலம் அவர்களுக்கு எட்டு ஆண்மக்களும், ஆறு பெண்மக்களும் பிறந்தனர். ஆண்மக்களில், அஃப்பான் என்பவர் மட்டும் உமையாக்களின் ஆட்சிக் காலத்தில் பிரபலமானவராய் இருந்தார்.